காங்கிரஸ் கட்சியையும் நான் கேட்க விரும்புகிறேன், அவர்களுக்கு ஒரு முகவரியைக் கொடுத்திருக்கிருர் அந்த ஏழைப் பங்காளன. இந்தியன் பாங்க், ராயப்பேட்டை, மதருஸ்-14 என்று கொடுத்திருக்கிருர், அவர்கள் அங்கே போகட்டும். அடுத்த ஒரு கணக்கு இந்தியன ஓவர்ஸீஸ் பாங்க், மைலாப்பூர். அங்கு ஒரு முகவரி தந்திருக்கிருர்கள். இன்னெரு முகவரி ஸிண்டிகேட் பாங்க், ப்ராட்வே, என்று ஒரு முகவரி கொடுத்திருக்கிருர். இப்படி உண்மையான கணக்கைக் காட்டாமல் முகவரி கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு அரசியல்வாதியை நம்பி இந்த நாட்டு மக்கள் சென்றுவிடுவார்களா? இவர்கள் நாட்டிலே பெரிய ஒரு கலவரத்தை, வன்முறைச்செயலைத் தூண்டிப் பார்த்தார்கள். ஆனல் அந்த வன்முறைச் செயல்கள் . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏதோ விவரங்கள் எல்லாம் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு தகவல்களைத் தந்து கொண்டிருக்கிருர்கள். அப்படிக்கூறும்போது, சத்தியா ஸ்டுடியோஸ்க்காக வேண்டி பல க்ரவுண்ட்ஸ் கொடுத்ததாக இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது, அதைத் தாங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா ? அதை நல்ல செய்கை என்று உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : கணக்குகள் ஒழுங்காக, நேர்மையாக இந்த மன்றத்தில் வைத்திருக்கப்படவேண்டும் என்பதுதான் என் வாதமே தவிர வேறல்ல. இந்தச் சட்டமன்றத்தில் நாம் சட்டம் நிறைவேற்றியும் அது பயன்தரவில்லை என்ருல் அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசு விவசாய வருமான வரி போட்டிருக்கிருர்கள். மாநில அரசுகளின் உரிமையில் மத்திய அரசு தலையிட்டு இந்த வரி விதிக்கப்பட்டிருப்பதைக் கடுமையாக எதிர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிருேம். இவை எல்லாம் மாநில அரசுகளைக் கலந்து செய்யப்படுகிறதா என்பது ஐயப்பாட்டுக்குரிய விஷயமாக அமைந்துள்ளது. நம்முடைய மாநிலத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குத் தான் மத்திய அரசைப் பார்த்து தைரியமாக இந்த வரியை

விதிக்க உங்களுக்குத் தகுதி இல்லை. மாநில அரசுகள் இதை விதிக்கவேண்டும், அது எங்களது வரி இனத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்கக் கூடிய ஆற்றல், திறமை இருக்கிறது அப்படிக் கேட்க தைரியமுள்ள ஆட்சி இந்த நாட்டில் வேறு எதுவும் இல்லை என்பதை தெளிவுபடுத்த நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல் இன்று நாட்டில் கட்சி விட்டுக் கட்சி மாறி அரசியல் நடத்தலாம் என்று சொல்லக்கூடியவர்கள், கட்சி விட்டுக் கட்சி மாறும் பச்சோந்திக் கும்பலைக் கட்டுப்படுத்த மத்திய அரசு அந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்பதை நம் முதல்வர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். அது கட்டாயமாக சட்டமாக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பு இருக்கும். அப்படி கட்சி விட்டுக் கட்சி மாறுபவர்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறும்போது உடனே தங்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத்தான் அவர்களை வேறு கட்சியில் அறிமுகப்படுத்தவேண்டுமேதவிர, ஒரு கட்சியில் நின்று வெற்றி பெற்றுவிட்டு அவர்கள் சுயநலத்திற்காக வேறு கட்சிக்கு மாறக் கூடிய கும்பலை வன்மையாகத் தமிழகம் கண்டிக்கிறது.

அதேபோல், இந்த மன்றத்தில் புதிதாக அமர்ந்துள்ள ஒரு கட்சி கொள்கை உள்ள ஒரு கட்சியா என்று கேட்க விரும்பு கிறேன். அது கொள்கை உள்ள ஒரு கட்சியாக இருக்குமானல் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நமது முதல்வர் அவர்கள் சமர் பித்துள்ள நிதிநிலை அறிக்கைமீது அந்தக் கட்சித் தலைவர் இங்கு வந்து பேசியிருக்கவேண்டும். கொள்கைகளை விமர்சித்திருக்க வேண்டும். தன் கட்சிக் கொள்கையினைப் பிரகடனப்படுத்தி யிருக்கவேண்டும். அதில்லாமல் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டு சட்டமன்றத்தில் போய் நாம் ஏதாவது பேசி முதல் அமைச்சர் அவர்களிடம் சிக்கிக்கொண்டு நாவலரிடம் சிக்கிக்கொண்டு, திரா விட முன்னேற்றக் கழகத்தினிடம் சிக்கிக் கொண்டு விட்டால் தப்ப முடியாது, நமக்கோ பேசத் தெரியாது, நமக்கு அந்த ஆற்றல் இல்லை, ஆகவே சட்டமன்றத்திற்குப் போகாமல் இருப்பதுதான் நியாயம் என்று கருதி இன்றைக்கு அந்தத் தலைவர் வெளியே இருந்து கொண்டு அரசியலை நடத்தப் பார்க்கிறார் என்று